**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.10/2023**

**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சந்திர மணிகண்டன்** | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : சுப்பன் | கணவர் பெயர் | : ----- |
| கிராமம் | : பூலத்தூர் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 41/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 23.03.2026 |

**( எதிரிகள் A2, A3 ஆஜரில் உள்ளனர், A1 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**முதல் விசாரணை :**

நான் பூலத்தூரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். எதிரிகள் எனது உறவினர்கள் ஆவார்கள். கடந்த 31.03.2023ம் தேதி மாலை சுமார் 05.30 மணியளவில் எங்கள் ஊரில் கலவரம் நடந்தது. நானும், எனது மனைவி சோனியா, எனது அப்பா சுப்பன் ஆகியோர் ஓரமாக நின்றுந்த போது கூட்டத்தில் யாரோ என்னை அடித்து தள்ளிவிட்டார்கள். மேலும் எனது பொலிரோ வாகனத்தையும் உடைத்து விட்டார்கள். பிறகு சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் கொடுத்தேன். உண்மை நிலவரம் குறித்து எனக்குத் தெரியவில்லை. போலீசாரிடம் முறையிட்டபோது என்னிடம் எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் வாங்கினார்கள். வேறு விபரங்கள் தெரியாது. போலீசார் என்னை விசாரணை

செய்யவில்லை.

**<u>அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

கடந்த 31.03.2023ம் தேதி மாலை 05.45 மணியளவில் பட்டளங்காட்டிற்கு அவகோடா நாற்று எடுக்கச்சென்று திரும்பும்போது எங்கள் ஊர் ரோட்டோரமாக எனக்கு சொந்தமான ஜீப்பை நிறுத்தி நானும், எனது மனைவியும் நின்றுகொண்டிருந்தபோது அப்போது அங்கு வந்த எதிரிகள் சூரியா, பிரபாகரன், சரன்ராஜ் ஆகியோர் எங்களைப் பார்த்து ஆபாசமாக திட்டி ஏன் வண்டியை இங்கு நிறுத்தினர்கள் என்றுச் சொல்லி என்னையும், எனது மனைவி சோனியாவையும் எதிரிகள் தாக்கினார்கள் என்றாலும், பிறகு கீழே கிடநத் கற்களை எடுத்து எதிரிகள் மூவரும் எனது வாகன கண்ணாடியை உடைத்துவிட்டார்கள் என்றாலும், அதை தடுக்கச் சென்றபோது எதிரி சூரியா மற்றும் பிரபாகரன் அரிவாளைக் கொண்டும் சரன்ராஜ் கம்பைக் கொண்டும் அடிக்க வந்தார்கள் என்றாலும் நாங்கள் பிறகு சத்தம் போடவும் எங்கள் ஊரைச் சேர்ந்த சென்றாயனும், சுரேஷ் –ம் வந்து சண்டையை விலக்கி விட்டதாக புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.23 18:17:40 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.**

**CC.No.10/2023**

**வழக்கு சாட்சி PW.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சோனியா** | தொழில் | : இல்லத்தரசி |
| தகப்பனார் பெயர் | : ------- | கணவர் பெயர் | : சந்திர மணிகண்டன் |
| கிராமம் | : பூலத்துார் | இனம் | : பெண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 31/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 23.03.2026 |

**( எதிரிகள் A2, A3 ஆஜரில் உள்ளனர், A1 மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**முதல் விசாரணை :**

நான் பூலத்துாரில் வசித்து வருகிறேன். கடந்த 31.03.2023ம் தேதி J.P. நகர் அருகே நானும், எனது கணவர் சந்திர மணிகண்டன் மற்றும் எனது மாமனார் பேசிக்கொண்டிருந்தபோது கூட்டமாக சண்டை போட்டார்கள். கூட்டத்தில் தாக்கிய நபர்கள் யார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. சந்தேகத்தின்பேரில் எனது கணவர் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

கடந்த 31.03.2023ம் தேதி மாலை 05.45 மணியளவில் பட்டளங்காட்டிற்கு அவகோடா நாற்று எடுக்கச்சென்று திரும்பும்போது எங்கள் ஊர் ரோட்டோரமாக எனது கணவருக்கு சொந்தமான ஜீப்பை நிறுத்தி நானும், எனது கணவரும் நின்றுகொண்டிருந்தபோது அப்போது அங்கு வந்த எதிரிகள் சூரியா, பிரபாகரன், சரன்ராஜ் ஆகியோர் எங்களைப் பார்த்து ஆபாசமாக திட்டி ஏன் வண்டியை இங்கு நிறுத்தினர்கள் என்றுச் சொல்லி என்னையும், எனது கணவரான அ.சா.1 ஐ எதிரிகள் தாக்கினார்கள் என்றாலும், பிறகு கீழே கிடநத் கற்களை எடுத்து எதிரிகள் மூவரும் எனது கணவர் வாகன கண்ணாடியை உடைத்துவிட்டார்கள் என்றாலும், அதை தடுக்கச் சென்றபோது அ.சா.1 ஐ எதிரி சூரியா மற்றும் பிரபாகரன் அரிவாளைக் கொண்டும் சரன்ராஜ் கம்பைக் கொண்டும் அடிக்க வந்தார்கள் என்றாலும் நாங்கள் பிறகு சத்தம் போடவும் எங்கள் ஊரைச் சேர்ந்த சென்றாயனும், சுரேஷ் –ம் வந்து சண்டையை விலக்கி விட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானம் ஆகிவிட்டதால் எதிரிகளுக்கு ஆதரவாக வழக்கிற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN
Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.23 18:17:51 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.